DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
-----
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.1, ATTUR.

| | | | |
|---|---|---|---|
| Calendar | .. .. **CC. 291/2023** | | |
| Deposition of Witness for | PW 1<br>Prosecution<br>Court | | |
| Name | : **திரு.**இராமசாமி | | : |
| Father/Husband Name | : த.பெ.கொண்டன் | Calling | : கூலி வேலை |
| Village | : ஆத்துார் | | : |
| Taluk | : ஆத்துார் | Age | : 70 |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 01.08.2025

**சாட்சி முன்னிலை. உறுதிமொழி எடுக்கப்பட்டது. முதல் விசாரணை.**துவக்க நேரம் 01.00

1) நான் ஆத்துாரில் வசித்து கூலி வேலை செய்து வருகிறேன். ஆஜர் எதிரி மாது எனது உறவினர் ஆவார்.

2. கடந்த 27.02.2023 அன்று காலை 07.30 மணிக்கு பொது பைப்பில் தண்ணீர் பிடித்துக்கொண்டிருந்தேன். அப்பொழுது, எதிரி மாது என்பவர் என்னை தண்ணீர் பிடிக்கவிடாமல், வேப்ப மரத்திற்கு தண்ணீர் விட்டு, நான் போட்ட பைப் என்று சொல்லி, என்னை தள்ளிவிட்டான். நான் பக்கெட்டை ஓங்கினேன். உடனே, ஆஜர் எதிரி மாது, தடியால் என்னை அடித்தார், அதில் எனக்கு தலையில் அடிப்பட்டு, இரத்தம் வந்தது.

3. அதன்பின்னர், 108 ஆம்புலன்ஸ் மூலம் எனது மகன் என்னை ஆத்துார், அரசு மருத்துவமனைக்கு அழைத்து சென்று, சிகிச்சையில் சேர்த்தான். நான் மருத்துவமனையில் இருந்தபோது, என்னை விசாரித்து, எழுதிக்கொண்டு, கையெழுத்து வாங்கினார்கள்.

என்னிடம் காட்டப்படும் ஆவணத்தில் உள்ள கையெழுத்து என்னுடையதுதான். **புகார் வாக்குமூலம் அ.த.சா.ஆ- 1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** ) வழக்கு சம்பந்தமாக போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பில் குறுக்குவிசாரணை**

போதிய வாய்ப்பளித்தும், எதிரி தரப்பில் குறுக்குவிசாரணை இல்லை.

**முடிவு நேரம்** 01.08

Taken Down by me in Open Court Read over to the Dependant in the presence of the accused and admitted by the Dependant to be correct

ANIS FATHIMA

Digitally signed by ANIS FATHIMA
Date: 2025.08.01 17:56:19 +0530

Judicial Magistrate No.1,
Attur.

DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
-----
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.1, ATTUR.

| | | | |
|---|---|---|---|
| Calendar | .. .. **CC. 291/2023** | | |
| Deposition of Witness for | PW 2<br>Prosecution<br>Court | | |
| Name | : **திருமதி. வசந்தி** | | : |
| Father/Husband Name | : க.பெ. பெருமாள் | Calling | : கூலி வேலை |
| Village | : ஆத்துார் | | : |
| Taluk | : ஆத்துார் | Age | : 36 |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 01.08.2025

**சாட்சி முன்னிலை. உறுதிமொழி எடுக்கப்பட்டது. முதல் விசாரணை**

துவக்க நேரம் 01.08

1) நான் ஆத்துாரில் வசித்து கூலி வேலை செய்து வருகிறேன். சாட்சி இராமசாமி மற்றும் ஆஜர் எதிரி மாது எனது பக்கத்துவீட்டுக்காரர்கள்.

2. கடந்த 27.02.2023 அன்று காலை 07.30 மணிக்கு பொது பைப்பில் தண்ணீர் எங்க தெருவில் உள்ள 5 வீட்டுக்காரர்கள் எல்லாரும் தண்ணீர் பிடித்துக்கொண்டிருந்தோம். அங்கு, மாது மற்றும் இராமசாமியும் இருந்தார்கள். மாது வீட்டின் வெளியில்தான் பொது தண்ணீர் பைப் உள்ளது, அதனால் தண்ணீர் பிடிக்கும்போதுதான் சின்ன சின்ன பிரச்சனைகள் செய்வார்.

3. மாதுவிற்கும், இராமசாமிக்கும் அடிக்கடி பிரச்சனை வரும். அதுபோல், கடந்த

27.02.2023 அன்று இராமசாமி என்பவர் தண்ணீர் பிடித்துக்கொண்டு சென்றபோது, எதிரி மாதுவின் மீது மோதிவிட்டதாக கூறி, பிரச்சனை செய்து, தடியால் அடிக்கபோனார், அப்பொழுது, கையில் வைத்திருந்த பக்கெட்டை வைத்து, இராமசாமி தடுக்க முற்பட்டார், இருந்தும் மாது, இராமசாமியின் தலையில் அடித்துவிட்டார். அதில் இராமசாமிக்கு அதிகமாக இரத்தம் வந்து, கீழே விழுந்துவிட்டார்.

4. அதன்பிறகு, நானும், எனது கணவர் பெருமாளும் இராமசாமியை அவரது வீட்டிற்கு அழைத்து சென்றோம். அதற்கு பின்னிட்டு, இராமசாமியின் மகன் 108 ஆம்புலன்ஸ் மூலம் இராமசாமியை ஆத்துார், அரசு மருத்துவமனைக்கு அழைத்து சென்று, சிகிச்சையில் சேர்த்தார். வழக்கு சம்மந்தமாக போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பில் குறுக்குவிசாரணை**

போதிய வாய்ப்பளித்தும், எதிரி தரப்பில் குறுக்குவிசாரணை இல்லை.

**முடிவு நேரம்** 01.15

Taken Down by me in Open Court Read over to the Dependant in the presence of the accused and admitted by the Dependant to be correct

ANIS FATHIMA

Digitally signed by ANIS FATHIMA
Date: 2025.08.01 17:56:34 +0530

Judicial Magistrate No.1,
Attur.

DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
-----
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.1, ATTUR.

| | | | |
|---|---|---|---|
| Calendar | .. .. **CC. 291/2023** | | |
| Deposition of Witness for | PW 3<br>Prosecution<br>Court | | |
| Name | : **திரு. தனிக்காசலம்** | | : |
| Father/Husband Name | : த.பெ. இராமசாமி | Calling | : வெல்டிங் வேலை |
| Village | : ஆத்தூர் | | : |
| Taluk | : ஆத்தூர் | Age | : 34 |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 01.08.2025

**சாட்சி முன்னிலை. உறுதிமொழி எடுக்கப்பட்டது. முதல் விசாரணை**

துவக்க நேரம் 01.15

1) நான் ஆத்துாரில் வசித்து வெல்டிங் வேலை செய்து வருகிறேன். சாட்சி இராமசாமி எனது அப்பா. ஆஜர் எதிரி மாது எனது உறவினர்.

2. கடந்த 27.02.2023 அன்று காலை 07.30 மணிக்கு பொது பைப்பில் தண்ணீர் எங்க அப்பாவும், மாது என்பவரும் தண்ணீர் பிடித்துக்கொண்டிருந்தார்கள். அப்போது ஏற்பட்ட பிரச்சனையில் மாது என்பவர் எனது அப்பாவை கீழே தள்ளி, கெட்டவார்த்தையால் திட்டி, தடியால் அடித்துவிட்டார். அதில் எனது அப்பாவிற்கு தலையில் அடிப்பட்டுவிட்டது. அதன்பின்னர், என்னைக்காயிருந்தாலும் உன்னை கொல்லாமல் விடமாட்டேன் என்று மாது, எனது அப்பாவை பார்த்து கூறினார்.

3. அதன்பிறகு, நான் 108 ஆம்புலன்ஸ் மூலம் எனது அப்பாவை ஆத்தூர், அரசு மருத்துவமனைக்கு அழைத்து சென்று, சிகிச்சையில் சேர்த்தேன். வழக்கு சம்மந்தமாக போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பில் குறுக்குவிசாரணை**

போதிய வாய்ப்பளித்தும், எதிரி தரப்பில் குறுக்குவிசாரணை இல்லை.

**முடிவு நேரம்** 01.19

Taken Down by me in Open Court Read over to the Dependant in the presence of the accused and admitted by the Dependant to be correct

ANIS FATHIMA

Digitally signed by ANIS FATHIMA
Date: 2025.08.01 17:56:44 +0530

Judicial Magistrate No.1,
Attur.